# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.105 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.1)

| | |
|---|---|
| Name | விஜி |
| Father/Husband Name | ஏகாநந்தம் |
| Calling/Occupation | வெல்டர் |
| Age | 29 |
| Address | கே.வி.குப்பம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.04.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் வெல்டிங் வேலை செய்கிறேன். நான் நாகேந்திரன் என்பருக்கு சொந்தமான கடையில் விக்கிரமாசிமேட்டில் வெல்டிங் கடை வைத்துள்ளேன். மார்கபந்து மகன் பிரபாகரன் என்னுடைய நண்பர். ஆஜர் எதிரிகளை தெரியும். 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதிய நேரத்தில் நான் கடையில் இருந்தபோது பக்கத்து கடையில் பிரச்சினை நடந்தது. நானும் பிரபாகரனும் போனோம். அங்கு கூட்டமான சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அதை பார்க்க

சென்ற எங்களை கூட்டத்தில் இருந்தவர்கள் பாட்டிலால் என்னை தலையில் அடித்துவிட்டார்கள். யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை. பிரபாகரனுக்கும் தலையில் அடிப்பட்டது. யார் அடித்தார்கள் என்று கூட்டத்தில் தெரியவில்லை. குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது. நான் எதிரிகளுக்கு எதிராக எந்த புகாரும் கொடுக்கவில்லை. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. **புகாரில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 26.04.2023 மாலை 04.00 மணி அளவில் நானும் பிரபாகரனும் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் என் கடைக்கு வந்து அசிங்கமாக திட்டினார்கள் என்றும் ஏன் அசிங்கமாக திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி சதீஷ் ஒரு சிறிய பேனா கத்தியை எடுத்து இத்தோடு ஒழிந்து போங்கடா என்று சொல்லி

வெட்ட வந்தபோது பிரபாகரனின் முழுங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தடுத்தபோது என்னை எதிரி தீபக் இருசக்கர வாகனத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து என் வலது தலையின் பின்பக்கம் அடித்தார் என்றும் எங்கள் இருவருக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டதால் மருத்துவனை செல்வதற்காக சென்றபோது கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் இது சம்பந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் போலீசில் என்னை அடித்துவிட்டார்கள் என்றுதான் சொன்னேன் யார் அடித்தார்கள் என்று பெயர் சொல்லவில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.01 18:16:15 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.105 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.2)

| | |
|---|---|
| Name | பிரபாகரன் |
| Father/Husband Name | பாண்டுரங்கன் |
| Calling/Occupation | Tool Maker |
| Age | 30 |
| Address | விக்கரமாசிமேடு, கே.வி.குப்பம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.04.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விக்கிரமாசிமேட்டில் வசிக்கிறேன். நான் தனியார் கம்பனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜி என் நண்பர். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை சுமார் 04.00 மணி அளவில் நான் அ.சா.1 விஜியின் கடைக்கு போனேன். பக்கத்து கடையில் சண்டை நடந்துக்கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் வேடிக்கை பார்க்க போனோம். அந்த கூட்டத்தில் தள்ளு முள்ளு நடந்தது.

அதில் அ.சா.1க்கும் எனக்கும் அடிப்பட்டுவிட்டது. யார் அடித்தார்கள் என்று தெரியாது. மருத்துவமனைக்கு போனோம். போலிசார் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் பெயரில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. சண்டை நடந்தது என்றுதான் சொன்னோம்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 26.04.2023 மாலை 04.00 மணி அளவில் நானும் அ.சா.1ம் அ.சா.1ன் கடையில் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1ன் கடைக்கு வந்து அசிங்கமாக திட்டினார்கள் என்றும் ஏன் அசிங்கமாக திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி சதீஷ் ஒரு சிறிய பேனா கத்தியை எடுத்து இத்தோடு ஒழிந்து போங்கடா என்று சொல்லி வெட்ட வந்தபோது என்னுடைய முழுங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தடுத்தபோது அ.சா.1ஐ எதிரி தீபக் இருசக்கர வாகனத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து அ.சா.1ன் வலது தலையின் பின்பக்கம் அடித்தார் என்றும் எங்கள் இருவருக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டதால் மருத்துவனை செல்வதற்காக சென்றபோது கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.04.01 18:16:22 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.105 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.3)

| | |
|---|---|
| Name | **பிரசாந்த்** |
| Father/Husband Name | **கோவிந்தன்** |
| Calling/Occupation | Mechanic |
| Age | 28 |
| Address | **கீழ்முட்டுக்கூர், கே.வி.குப்பம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.04.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

**நான் கீழ்முட்டுக்கூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் டூவீலர் மெக்கானிக்காக இருந்தேன். தற்போது ஆட்டோ ஓட்டுகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அ.சா.1 விஜிக்கு அடிப்பட்டுவிட்டு என்பதால் அவர்களை நான் குடியாத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். எப்படி அடிப்பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 26.04.2023 மாலை 04.00 மணி அளவில் அ.சா.1 மற்றும்அ.சா.2 இருவரும் அ.சா.1ன் கடையில் பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் அ.சா.1ன் கடைக்கு வந்து அசிங்கமாக திட்டினார்கள் என்றும் ஏன் அசிங்கமாக திட்டுகிறீர்கள் என்று அவர்கள் கேட்டதற்கு எதிரி சதீஷ் ஒரு சிறிய பேனா கத்தியை எடுத்து இத்தோடு ஒழிந்து போங்கடா என்று சொல்லி வெட்ட வந்தபோது அ.சா.2ன் முழுங்கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தடுத்தபோது அ.சா.1ஐ எதிரி தீபக் இருசக்கர வாகனத்தில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து அ.சா.1ன் வலது தலையின் பின்பக்கம் அடித்தார் என்றும் அவர்கள் இருவருக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டதால் மருத்துவனை செல்வதற்காக சென்றபோது கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.01 18:16:29 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.105 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.5)

| | |
|---|---|
| Name | **சொக்கநாதன்** |
| Father/Husband Name | Murugesan |
| Calling/Occupation | Ex-Army |
| Age | 45 |
| Address | B.N.Palayam Post, K.V.Kuppam Taluk, Vellore District. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.04.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் விக்கரமாசிமேட்டில் வசித்து வருகிறேன். நான் முன்னாள் இராணுவ வீரர். நாகேந்திரபாபுவை தெரியும். விஜி மற்றும் பிரபாகரன் (அ.சா.1 மற்றும் 2) ஐ தெரியும். இந்த வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து ஆவணம் தயாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. மேலும் சம்பவ இடத்தில் இருந்த உடைந்த பீர்

பாட்டிலை போலீசார் கைப்பற்றினார்கள். அதற்காக கையொப்பம் வாங்கினார்கள். ஆனால் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதி மாதம் போலிசார் சம்பவ இடத்தை பார்த்தார்கள் என்று குறிப்பாக தெரியவில்லை. ஆனால் மாலை 06.00 மணிக்குமேல் வந்தார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.04.01 18:16:49 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.105 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.7)

| | |
|---|---|
| Name | **முருகன்** |
| Father/Husband Name | **நடராஜன்** |
| Calling/Occupation | - |
| Age | 27 |
| Address | **கே.வி.குப்பம்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.04.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் ராஜாப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என் ஊர்க்காரர்கள் காவல் நிலையத்தில் இருந்தார்கள். நான் காவல் நிலையம் சென்றபோது என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. போலீசாரும் என்ன எழுதியுள்ளது என்று சொல்லவில்லை. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

கடந்த 27.04.2023 அன்று பகல் 12.00 மணி அளவில் ரங்கன்பேட்டை ரயில்வே கேட்டில் ஆஜர் எதிரிகளான சதீஷ் மற்றும் தீபக் ஆகியவர்களை போலீசார் பிடித்து விசாரித்து அவர்கள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிந்த பிறகு விசாரித்தபோது எதிரி சதீஷ் தாமாக முன்வந்து வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு தானும் மற்றொரு எதிரியான தீபக் இருவரும் சேர்ந்து சம்பவத்தன்று விஜி மற்றும் பிரபாகரனை கத்தியாலும் உடைந்த பீர் பாட்டிலாலும் தாக்கி காயத்தை ஏற்படுத்தினோம் என்று ஒப்புக்கொண்டு கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் என் முன்பும், சாட்சி சம்பத் என்பர் முன்பும் பதிவு செய்து படித்து காண்பித்து எதிரியின் ஒப்பம் பெற்று எங்களிடமும் கையொப்பம் பெற்று அந்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் அன்றே 13.15 மணி அளவில் ஸ்டீல் மடிப்பு கத்தி ஒன்றையும் TN 11 E 4119 என்ற இருசக்கர வாகனத்தையும் போலீசார் மகசரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.01 18:16:56 +0530